IA 10/2026 in O.S 97/2019

Dated : 26.03.2026

உத்தரவு:

இரு தரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்/வாதி தரப்பில் இந்த வழக்கும் தாவா சொத்துக்களைப் பொறுத்து உரிமை விளம்பல் மற்றும் அதன் தொடர்ச்சியாக சுவாதீன மீட்பு பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர்/வாதி தரப்பில் இந்த மனுவும், தாவாச் சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வசமிருந்து தங்களுக்கு மீட்டுத்தர ஏதுவாக மேற்படி வழக்கை உரிமை விளம்பல் அதன் தொடர்ச்சியாக சுவாதீன மீட்புகை பரிகோரம் கோரி மேற்படி வழக்கில் உரிய திருத்தம் செய்து வழக்குரையும் திருத்தப்பட்டுள்ளது என்றும், அதன்படி மேற்படி வழக்கின் மதிப்பு ரூ.4,01,270/- ஆக உயர்ந்துள்ளது என்றும், அதனால் நீதிமன்ற ஆள்வரையினை தாண்டி சார்பு நீதிமன்ற ஆள்வரைக்குள் வருவதால், மேற்படி வழக்கை கீரனூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை அனுமதிக்க ஆட்சேபனை இல்லை என தெரிவிக்கப்பட்டடுள்ளது.

இதனைக் குறித்து பரிசீலனை செய்ததில், மேற்படி, அசல் வழக்கின் மதிப்பு இந்நீதிமன்றத்தின் பண அதிகார வரம்பான ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டு இருப்பது தெரியவருவதால், மனுதாரர்/வாதி கோரியவாறு உரிய அதிகார வரம்பு கொண்ட நீதிமன்றத்தில், இவ்வழக்கு தாக்கல் செய்வது அவசியமாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பிலும் இதனை் ககுறித்து எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை

எனவே, மேற்கண்ட பரிசீலனைகளின் அடிப்படையில்,இந்த அசல் வழக்கின் வழக்குரையை உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டி திருப்ப உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.03.26 16:14:30 +0530

மாவட்ட உரிமையில் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.